உ **Regd. No. M. 3487**

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

## (மாத வெளியீடு.)

தாரண ௵ ஆவணி மீ



திருப்புகழ் - அறிவிலாப்பித்தர்.

...ழமிர்தம் காரியாலயம்,
...ாங்கேயநல்லூர்.

E. ...a KIRUPANANDAVARI Printed & Published by M. M. ...A SIVAM, at the THIRUPPUGAL AMIRTHAM PRESS, Kangayanellur, Via Katpadi. N ...

# அன்பர்கட்கு

அரசினரின் காகிதக் கட்டுப்பாடு (சிக்கன) உத்தரவுக் கிணங்க நமது வெளியீடு இந்த அளவில் வெளிவர நேர்ந்தது கூடிய விரைவில் ஷை உத்தரவு போதிய அளவில் திருத்தப் பட்டு நமது வெளியீடு பழைய அளவில் வெளிவருமென எதிர் பார்க்கின்றோம்.

மானேஜர், தி. அ.

---

## ஆறுபடைவீட்டுப் படம்.

**விலை 25-க்கு தபாற்கூலியுள்பட ரூ. 6–14–0.**

இருபத்தைந்துக்குக் குறைந்து தபாலில் அனுப்ப இயலாது.

கீழ்க்கண்ட விலாசங்களிலும் கிடைக்கும் :—

திரு செ. பாலசுப்பிரமணிய பிள்ளை, 25 மேலக்கோபுரத் தெரு, மதுரை.

ரா. ப. சாமிக்கண்ணு பிள்ளை, செட்டிபேட்டைத் தெரு, உறையூர், (திருச்சி.)

வீ. சங்கரம் பிள்ளை, 251 தெற்குப்புதுத்தெரு, திருநெல்வேலி டவுன்.

T. P. சக்கிரபாணி செட்டியார், 24 செட்டிநடுத்தெரு, மகதளம்பேட்டை, கும்பகோணம்.

M. குஞ்சிதபாதம் பிள்ளை, கிராமமுனிசீபு, முத்தோஜியப்பா சந்து, தஞ்சாவூர்.

K. V. நடராஜன், ஜவுளி வியாபாரம், அக்ரஹார வீதி, ஈரோடு

சச்சிதானந்தம், 12 ஆறுமுகப்பிள்ளையார்கோவில் தெரு, குகை, சேலம்.

அரு. லெ. வெ. நடராஜன் செட்டியார், பாங்கர், ராஜவீதி, கோயம்புத்தூர்.

R. சுந்தரராஜ ஐயர், E 177 ரெயில்வே இந்தியன் காலனி, பாண்டிரோடு, விழுப்புரம்.

---


**நம்பிக்கைப்பெற்ற ஆயுர்வேத ஔஷதங்கள்.**




சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கனைான், 64 பந்தர்தெரு, மதராஸ்.

உ

ஓம் குஹாய நம:


# திருப்புகழமிர்தம்



(All Rights Reserved)


"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றும்
திருப்புகழைக் கேளீர் தினம்"


| மலர் க. Vol 9. | தாரண ஹூ ஆவணி மீ 1உ ஆகஸ்டு 1944 | இதழ் ரு No 5. |
|---|---|---|


## காஞ்சீபுரம்

## திருப்புகழ்

அறிவிலாப் பித்த ருன்ற னடிதொழாக் கெட்ட வஞ்சர்
அசடர்பேய்க் கத்தர் நன்றி யறியாத

அவலர்மேற் சொற்கள் கொண்டு கவிக ளாக்கிப்புகழ்ந்து
அவரைவாழ்த்தித் திரிந்து பொருள்தேடி

சிறிதுகூட் டிக்கொணர்ந்து தெருவுலாத்தித் திரிந்து
தெரிவைமார்க்குச் சொரிந்து அவமேயான்

திரியுமார்க்கத்து நிந்தை யதனைமாற்றிப் பரிந்து
தெளிய மோக்ஷத்தையென்று அருள்வாயே

இறைவர்மாற் றற்ற செம்பொன் வடிவம் வேற்றுப் பிரிந்து
இடபமேற் கச்சிவந்த உமையாள்தன்

இருளைநீக்கத் தவஞ்செய் தருளநோக்கிக் குழைந்த
இறைவர் கேட்கத்தகுஞ்சொ லுடையோனே

குறவர் கூட்டத்தில் வந்து கிழவனாய்ப் புக்கு நின்று
குருவி யோட்டித் திரிந்த தவமானைக்

குணமதாக்கிச் சிறந்த வடிவுகாட்டிப் புணர்ந்த
குமரகோட் டத்தமர்ந்த பெருமாளே.

## பதவுரை.

இறைவர் - எப்பொருளிலுந் தங்கியிருப்பவராகிய சிவபெருமானுடைய, மாற்று அற்ற செம் பொன் - மாற்றில்லாத சிவந்த பொன்னைப்போல் ஒளிசெய்கின்ற, வடிவம் வேற்று பிரிந்த - திருமேனியிலிருந்து வேருகப்பிரிந்து, இடப மேல் கச்சி வந்த, விடையின்மீது திருக்கச்சியம்பதிக்கு வந்தருளிய, உமையாள் - உமாதேவியார், தன் இருளை நீக்க தவஞ்செய்து அருள - தன்னால் இறைவன் கண்மலரை மூடிய காரணமாக உண்டாகிய இருள் தொலையும் பொருட்டு மாதவஞ்செய்து உலகிற்கு ஒளியைத் தரும் பொருள் சிவமே என்று காட்டியருள, நோக்கி குழைந்த - அத்தவத்தின் திட்பத்தைப் பார்த்தருளி கம்பாநதியை யேவி காமாக்ஷி தேவி தழுவக்குழைந்தருளிய, இறைவர் கேட்க தகும் சொல் - சிவபெருமான் கேட்பதற்கு ஏற்ற சிறந்த பிரணவார்த்தத்தை, உடையோனே - உடையவரே! குறவர் கூட்டத்தில் வந்து - நம்பிராஜன் முதலிய குறவர்களது கூட்டத்திற்கு (வேடவடிவுடன்) வந்தும், கிழவனாய் புக்கு நின்று - கிழ வடிவுடன் போய் நின்றும், குருவி ஓட்டித் திரிந்த - தினைப்புனத்திலிருந்து குருவிகளை யோட்டிததிரிந்தவராகிய, தவமானை - தவத்திற சிறந்த வள்ளியம்மையாரை, குணம் அது ஆக்கி - அருட் குணங்களை யுடையவராகச்செய்து, சிறந்த வடிவு காட்டி புணர்ந்த - சிறந்த அருட்கோலத்தைக் காட்டிக் கலந்துகொண்ட, குமர கோட்டத்து அமர்ந்த - குமர கோட்டம் என்ற காஞ்சிபுரத் திருக்கோயிலுள் எழுந்தருளிய, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! அறிவு இலா பித்தர் - மெய்யறிவில்லாத பித்து பிடித்தவரும், உன்றன் அடி தொழா கெட்ட வஞ்சர் - தேவரீருடைய திருவடியை வணங்காத கொடிய வஞ்சகரும், அசடர் - கீழ்மக்களும, பேய்கத்தர் - பேய்போல் அலைபவரும், நன்றி அறியாத அவலர்மேல் - நன்றியறிவில்லாத வீணரும் ஆகிய மூடர்களின் மீது, சொற்கள் கொண்டு - நல்ல சொற்களைத் தொடுத்து, கவிகள் ஆக்கி புகழ்ந்து - பாடல்களைப்பாடி அந்த ஈனர்களைப் புகழ்ந்து, அவரை வாழ்த்தி திரிந்து - அவ்வீணரை வாழ்த்தி அவர்கள் இருக்குமிடந்தொறுந் திரிந்து, பொருள் தேடி - பொருளைத்தேடி, சிறிது கூட்டி கொணர்ந்து - சிறிது சிறிதாகச் சேர்த்துக்கொண்டுவந்து, தெரு உலாத்தி திரிந்து - விலைமகளிருடைய தெருக்களில் உலாவித்திரிந்து, தெரிவை மார்க்கு சொரிந்து - அப் பொதுமகளிர்க்கு மழைபோல் சொரிந்து கொடுத்து, அவமே யான் திரியு மார்க்கத்து - அடியேன் பயனில்லாமல் திரிகின்ற புல்லிய வழியின், நிந்தை அதனை மாற்றி

இகழ்ச்சியை மாற்றி, பரிந்து - அடியே[illegible] அன்பு [illegible]து- தெளிய மோக்ஷத்தை - என் அறிவு தெளியுமாறு முத்தியை, என்று அருள்வாயே - என்றைய தினந்தான் தருவீரோ?

## பொழிப்புரை.

சிவபெருமானுடைய மாற்றறியாத செழும்பசும் பொன் மேனியினின்றும் பிரிந்து விடையின் மீதூர்ந்து கச்சியம்பதிக்கு வந்த உமாதேவியார், கண்மலர் மூடியதால் உண்டாகிய இருள் நீங்கப் பெருமானைப் பூசித்து, கம்பா நதியின் வெள்ளத்திற்கு அஞ்சி சிவலிங்கத்தைத் தழுவ, அம்மையின் தவத்திற்கு இரங்கிக் குழைந்தருளிய கண்ணுதற் கடவுள் கேட்பதற்குரிய பிரணவார்த்தத்தை யுடையவரே! குறவர் கூட்டத்திற்குள் வந்து கிழவடிவந் தாங்கிச்சென்று, குருவியோட்டிக்கொண்டு தினைப்புனங் காத்திருந்த எம்பெருமாட்டியாகிய தவத்தின் மிக்க வள்ளி மானை, அருட்குணங்களுடையவராகச்செய்து, சிறந்த திருமேனியை காட்டியருளிக்கலந்த, குமர கோட்டம் என்ற காஞ்சித் திருக்கோயிலில் எழுந்தருளி யுள்ள, பெருமிதமுடையவரே! அறிவில்லா பித்தரும், உமது திருவடி தொழாத கொடிய வஞ்சரும், மூடரும் பேயரும், நன்றியறிவில்லாத வீணருமாகிய கீழ்மக்களின் மீது, இனிய தமிழ்ச் சொற்களைத் தொடுத்து கவிகளாகப் பாடி அவரை வாழ்த்திப் புகழ்ந்து, அவர் இருக்கை தோறும் திரிந்து, அவர்கள் தரும் பொருளைச் சிறிது சிறிதாகச் சேர்த்து, விலைமகளிர் வீதிதொறும் திரிந்து, அப் பரத்தையர்க்குத் தாராளமாகத் தந்து, வீணாக அடியேன் திரிகின்றேன். இப்புன்னெறியைத் தொலைத்து நன்னெறியில் நிற்குமாறு அன்புடன் அருளி, என் அறிவு தெளிய முத்தியை தேவரீர் என்று தருவீரோ?

## விரிவுரை.

அறிவிலாப் பித்தர் :—

மிகவும் சிறந்த மொழி தமிழ்; தெய்வீகமுடைய செம்மொழி. அதனால்தான் "தண்டமிழ்" "செந்தமிழ்"

"இந்தமிழ்" என்றெல்லாம் பேசப்படுகின்றது. இத்தகைய தெய்வத் தமிழைப் பயின்று பாட்டிசைக்கும் ஆற்றல் வாய்ந்து, எவன் பிறப்பிறப்பை நீக்கி பேரானந்தத்தை தருவானோ - எவன் பேராயிரம் பரவி வானோரேத்தும் பெருமானோ - எவன் மறையாகமங்களால் துதிக்கப் பெறும் மாதேவனோ அந்த எம்பெருமானைப் பாடி யுய்வு பெறாமல், கேவலம் உண்டுடுத்துழலும் சிறு தொழிலும் சிறுமையும் உடைய மனிதர்களைப் பாடுவது எத்துணை மதியீனம்? காமதேனுவின் பாலை கமரில் உகுப்பதை யொக்கும்; தமது அறிவையும் தமிழையும் அறிவுக்கறி வாகிய இறைவன்மாட்டுப் பயன்படுத்தாமல், கேவலம் பொருள் விருப்பால் மனிதர்மாட்டுப் பயன்படுத்துவது மிகவும் வருந்தத்தக்கது.

யாமோதிய கல்வியும் எம்மறிவுந்
தாமே பெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல் போ யறமெய்ப்புணர்வீர்
நாமேனடவீர் நடவீரினியே

என்ற கந்தரநுபூதித் திருவாக்கை உய்த்துணர்மின்கள். அங்ஙனம் பாடப் பெறுகின்றவர் எத்தன்மையானவர்? என்பதை சுவாமிகள் கூறுமாறு காண்க. "அறிவிலாப் பித்தர்" நல்லறிவென்பது ஒரு சிறிதும் இல்லாத பைத்தியம் பிடித்து உலகில் பயனற்று அலைபவர்; பித்தன் எப்படித் திரிந்துழல்வானோ அதுபோல், பணப்பித்தும், பெண் பித்தும் பிடித்துத் திரிபவர்.

"மத்தேறி யலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்திறேடு
பித்தேறி யுழல்கின்ற மனத்தா லந்தோ
பேயேறி னலிகின்ற பேதையானேன்"

—இராமலிங்கஅடிகள்.

அடிதொழாக் கேட்ட வஞ்சர் :—

இறைவன் திருவடித்தாமரைகளைத் தொழுவதற் கென்றே படைத்த கரங்களால் அவ்விறைவனைத் தொழாது கொலை புலையாதி குற்றங்களையே புரிந்து வஞ்ச நெஞ்சமுடன் வாழ்பவர். முதல் கொடுத்த

முதலாளியை ஏமாற்றி சில பொருளை மறைத்து வைப்பதனை வஞ்சனை யென்பர். இறைவன் தந்தருளிய இக்கரங்களாலும் தலையாலும் அப் பரமபதியை வணங்குதலின்றி உண்பதும் உறங்குவதுமாக இருந்தால் வஞ்சர் என்றனர். மனிதனை யேமாற்றுபவர் வஞ்சர் எனப்படுவர்; இறைவனையே யேமாற்றுபவர் கெட்ட வஞ்சர் எனப்படுவர்.

நன்றி யறியாத அவலர் :—

ஒரு மனிதனிடத்தில் இருக்கவேண்டிய குணங்களுள் முதன்மையானது நன்றியறிவு. மனிதனை யுயர்த்துவது நன்றிமறவாமையே; ஆன் முலை யறுத்த பாவம், கள் குடித்த பாவம், கொலை புலை புரிந்த பாவம் ஆகிய எல்லாப் பாவங்களுக்குங் கழுவாயுண்டு. கழுவாயில்லாத - உய்தி யில்லாத பாவம் நன்றி கோறலாம்.

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

என்பர் திருவள்ளுவர்.

மேலும் நன்றிசெய்தவன் பின்னவொரு காலத்தில் கொன்றலொத்த கொடுமை புரியினும் அவன் முன் புரிந்த நன்றியை நினைத்து அவனுக்குத் தீங்கு புரியாமல் நல்லவர்கள் ஒதுங்கி அவன் முன் செய்த நன்றியைப் பாராட்டி அவனுக்கு நன்மையே செய்வர்.

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும்.

நன்றி மறந்த பாவிகள் ஒருபோதும் ஈடேற மாட்டார்கள். அவர்கள் விரைவில் அழிவர். அவரைக் கொல்வதற்கு வேறு கூற்றுவன் வரவேண்டா. அவர் மறந்த நன்றியே அவரைக் கொன்றுபோடும்.

ஒன்றொரு பயன்றனை யுதவினோர் மனங்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்றொழி லவர்க்கு முன் புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூற்றம் வேண்டுமோ —கந்தபுராணம்.

நன்றி பல செய்து ஒரு தீங்குபுரியினும் புல்லர் அந்த தீங்கையே பெரிதாக எண்ணி எல்லா நன்றிகளையும் உடனே மறந்து விடுவர்.

" நன்றி பலவாக ஒரு நவை புரீவரேனுங்
கன்றிடுவதன்றி முதுகயவர் நினையாரே " —மகாபாரதம்.

" எழுநூறு நன்றிசெய் தொன்று தீதாயின்
எழுநூறுந் தீதாய் விடும் " —நாலடியார்.

அங்ஙனம் நன்றியின் உயர்வையே யறியாத வீணர்களை என்னென்றுரைப்பது.

சொற்கள்கொண்டு கவிகளாக்கி..........பொருள் தேடி :—

இத்தகைய பயனில்லாத பதடிகள் இருக்கை தொறும் போய் தூய செந்தமிழை - இறைவனைப் பாடுதற்குரிய தீந்தமிழை - வறிதாக அப்பதர்களை புனைந்துரையும் பொய்யுரையுமாகப் புகழ்ந்து பாடி அவர்கள் தரும் பொருளைப்பெற்று மகிழ்வர். சிறிது காலமே நின்று மின்னலைப்போல் விரைவில் அழியும் பொருளையே பெற்று வீணுற்றனர். என்றும் அழியாத திருவருட் செல்வத்தை வாரி வாரி வழங்கும் எம்பெருமானைப் பாடி யுய்யுந் திறனறியாது கெடுவர். அந்தோ ! பரிதாபம். அவர்களின் மதியின்மைதான் என்னே !

குன்றும் வனமுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவ தென்றுந் தீராதோ—என்றுங்
கொடாதவரைச் சங்கென்றுங் கோவென்றுஞ் சொன்னால்
இடாதோ அதுவே இது. —இரட்டையர்.

வஞ்சக லோப மூடர் தம் பொருளூர்கள் தேடி
மஞ்சரி கோவை தூது பலபாவின்
வண்புகழ் பாரி காரி என்றிசை வாதுகூறி
வந்தியர் போல வீணி லழியாதே
—திருப்புகழ்.

சிறிது கூட்டிக் கொணர்ந்து - தெரிவை மார்க்குச்சொரிந்து :—

இங்ஙனம் வறியபுலவன் தன் வீடு தேடிவந்து உயர்ந்த பொருள்களோடு கூடிய பாடல்களைப் பாடினும் அவ்வுலோப சிகாமணிகளாகிய செல்வவந்தர் தாராளமாகப் பொருளைத் தராமல் " இன்று வா " " நாளை வா " என்று அலையவைத்து மிகச்சிறிய அளவில் பொருள்

தருவர். அங்ஙனம் கிடைக்கின்ற பொருளைச் சிறிது சிறிதாகச் சேர்த்துத் திரட்டிக் கொணர்ந்து அதனை அற வழியில் செலவிடாமலும் தானும் அனுபவிக்காமலும் பொதுமகளிர்க்கு வழங்கிப் புன்கணுறுவர்.

தெளிய மோட்சத்தை யென்று அருள்வாயே :—

இவ்வாறு அலைந்து அவமே திரியும் கலங்கிய அறிவானது தெளிவு பெற்று "முருகா! மூவர் முதல்வா!" என்று உன்னைப் பாடி யுய்வு பெற என்று நீர் அருள்வீர்? என்று சுவாமிகள் வினவுகின்றனர்.

மாற்றற்ற செய்போன் வடிவம் :—

சிவபெருமானுடைய திருமேனி உருகிய செம்பொன் போல் ஒளிமயமாக விளங்கும். "பொன்னார் மேனியனே" என்பார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். ஆனால் நாம் காணுகின்ற இந்தப் பொன்னன்று. இந்தப் பொன்னுக்கு மாற்றுண்டு. இன்னும் மாற்றுயர்ந்த சாம்பூநதம் என்னும் பொன்னுமன்று. மாற்றில்லாத ஒரு பொன் னிருக்குமானால் அப்பொன் வண்ணமாகும் அப்பரமபதி யின் வடிவின் வண்ணம்.

"மாற்றறியாத செழும் பசும் பொன்னே
மாணிக்கமே சுடர் வண்ணக் கொழுந்தே" —திருவருட்பா.

பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி பொலிந்
திலங்கும்
மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை வெள்ளிக்
குன்றம்
தன்வண்ண மெவ்வண்ணம் அவ்வண்ண மால்விடை தன்னைக்
கண்ட
என்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மாயின ஈசனுக்கே
—சேரமான் பெருமான்நாயனார்.

வெற்றுப் பிரிந்து.........குழைந்த இறைவர் :—

உமாதேவியார் உலகம் உய்யும் பொருட்டு ஒளி கட்கெல்லாம் மூலகாரணமாயுள்ள சிவபெருமானுடைய திருக்கண்களை மூடியருளினார். அதன் காரணமாக உலகமெல்லாம் இருண்டுவிட்டது. அதன் காரணமாக இறைவனை விட்டுப்பிரிந்து மண்ணுலகுற்று காஞ்சியம்

பதியில் கம்பா நதிக்கரையில் மணலால் சிவலிங்கத்தை எழுந்தருளப்புரிந்து வழிபாடாற்றினர்; அம்மையின் அன்பை உலகுணரப்புரிவான் வேண்டி பெருமான் நதியில் வெள்ளம் வரச்செய்தனர். அதுகண்ட அம்மை தனக்கு ஆபத்து வந்ததே என்றெண்ணாது சிவலிங்கத் திருமேனிக்குப் பழுது வருகின்றதே என்று பயந்து இலிங்கத்தைத் தழுவிக்கொண்டனர். அம்மையின் அன்பைக்கண்ட ஆலமுண்ட நீலகண்டர் குழைந்து அநுக்ரகம் புரிந்தருளினர்.

**கேட்கத்தகுஞ் சொல் உடையோனே :—**

சனகாதிகட்கு உபதேசித்த சிவபெருமானும் கேட்பதற்கு உரிய பிரணவார்த்தமாகிய செஞ்சொல்லை உடையவர் முருகப்பெருமான்.

**தவமானைக் குணமதாக்கி :—**

வள்ளிநாயகியார் தினைப்புனத்தில் ஏனல் காத்திருந்தனர். பாசபந்தம் நீங்கப் பெறாதிருந்தமையால் குமரப்பெருமான் வேட வடிவுடனும் கிழ வடிவுடனும் போய் ஆடல் புரிந்தனர். நிஜவடிவு காட்டாதொழிந்தனர். பின்னர் யானையைக் கண்டவுடன் உயிர்க்கு இறுதி நேரும்போது சுற்றமும் நண்பரும் உதவுதலில்லை; எம்பெருமானே அப்போது பற்றுக்கோடு என்று பாசபந்தம் நீங்கப் பெற்றனர். அங்ஙனம் குணமதாக்கிய பின் செவ்வேள் சிறந்த முடிவு காட்டியாட்கொண்டனர்.

குமரகோட்டத்தமர்ந்த :—

குமரகோட்டம் என்பது காஞ்சீபுரத்தில் உள்ள ஒரு சிறந்த முருகர் கோயிலாகும். அங்கு ஆண்டவன் காண்பார் கண்ணுங் கருத்தும் ஒருங்கே கவருங் கவினுடன் விளங்கி அடியார் அலக்கணகற்றி யருள்புரிகின்றனர்.

## கருத்துரை.

**சிவகுருநாதரே! வள்ளியம்மையாரது கணவரே! குமரகோட்டத்தமர்ந்த குரிசிலே! அறிவில்லாத அசடரைப் பாடியலையும் புன்மையை யொழித்து தேவரீரைப் பாடும் நன்மையை நல்கி அடியேனை ஆட்கொள்வீர்.**